★ அடக்குமுறை ஆட்சி அதிதீவிரமாகிறது! ★

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (27—2—50) ✠ வெளியீடு (28—2—50) [இதழ் 179

பாதுகாப்புச் சட்டத்தைப் பலப்படுத்துகிறார் பட்டேல்

நீதிமன்றத் தீர்ப்புகளைக் கண்டு கலக்கம்

—(0)—

பொதுமக்கள் அமைதி பாதுகாப்பு என்ற பெயரில் பயங்கரச் சட்டம்!

பாராளும் மன்றத்தில் பட்டேலின் மசோதா

"இச்சட்டத்தை உடனே நிறைவேற்றாவிடில் பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும். தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள காவற் கைதிகளை விடுதலை செய்யும்படி, கல்கத்தா போன்ற சில மாகாண உயர்நீதி மன்றங்களில் புது அரசியல் சட்டத்தைக் காட்டி வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. பீகார் சர்க்காரும், பம்பாய் சர்க்காரும் காவற் கைதிகளை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்துவிட்டன. இந்த நிலைமையை உடனே தடுத்து நிறுத்தாவிடில் நாம் பாடுபட்டுத் தேடிய சுதந்திரம் பறிபோய்விடும்."

"பரிசீலனைக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் சில வழக்குகள்கூட நீதிமன்றங்களுக்கு வந்துவிட்டது ஆச்சர்யமாகவே இருக்கிறது."

"எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம், கம்யூனிஸ்டுகளால் நேரவிருக்கும் ஆபத்தைத் தடுக்க வேண்டியதே. கம்யூனிஸ்டுகளின் தொல்லையிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால், ஓர் அளவுக்கு இத்தகைய திட்டங்கள் தேவையே"

"இத்தகைய அடக்குமுறைத்திட்டத்தைத் தயாரிக்க இரண்டு நாள் உறக்கமின்றி கண்விழித்துக் கஷ்டப்பட்டேன்."

என்று சர்தார் பட்டேல், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்துக்குப் பாதுகாப்புத் தேடும் முறையில், புதியதொரு மசோதாவை உற்பத்திச் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தின் துணைநாட பல பாதுகாப்புக் கைதிகள் தப்பித்துக்கொள்ளுகிறார்களாம். நீதிமன்றங்களும் சட்ட ஆதாரங்களைக் காட்டி காவற் கைதிகளுக்கு நீதி வழங்குவதன் மூலம், அவர்களை விடுதலை செய்துவிடுகின்றனராம். ஆகவே இங்ஙனம் நீதிப்பாதையில் காணப்படும் சின்னஞ்சிறு வாயில்களையும், இந்த மசோதா மூலம் மூடிவிட பட்டேல் பிரபு முடிவுகட்டிவிட்டார் போலும்!

இம்மசோதா பாராளும் மன்றத்தில் பலத்த விவாதத்துக்கிடையே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைச் சுட்டிக்காட்டி, பாதுகாப்பு என்று பக்குவமாகப் பேசி பட்டேல் பிரபு தனது எண்ணத்தை இம்மசோதா மூலம் ஒருவாறு ஈடேற்றிவிட்டார்!

அரசியலார் மனது வைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பதைத் தெள்ளத் தெளிய காட்டுவதாகவே உள்ளது இம்மசோதா.

காவலில் வைக்கப்படுவோருக்கு அதற்குரிய காரணங்கள் விளக்கப்பட்டாலும் படலாம், இல்லாவிட்டாலும் இல்லையாம்! பொதுஜன நன்மைக்குப் பாதகம் செய்பவர் என்று அரசியலாரால் கருதப்பட்டால் காரணம் காட்டாமலேயே காவலில் வைக்கப்படுவார்களாம்.

ஆலோசனைக்குழு என்ற பெயரில், அரசியலாரால் நியமிக்கப்படும் குழுவினரே காவற் கைதிகட்கு நீதி வழங்க வேண்டும். ஆனால் ஆலோசனைக்குழு முன் நின்று தனது கருத்தைத் தெரிவிக்க காவற்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்பார்க்க)

இனி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் போராட்டமே!

வெற்றி கிட்டும்வரை போராடுவோம்

—(0)—

பிரிட்டிஷ் தேர்தல் பற்றி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அறிவிப்பு

லண்டன், பிப். 26—

பிரிட்டிஷ் தேர்தலில் கம்யூனிஸ்டுகளில் ஒருவருக்குக்கூட வெற்றி கிடைக்காமல் போனதை யொட்டி, பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்டுகள் அவசரமாகக் கூடி தங்கள் எதிர்கால வேலைத் திட்டம் பற்றி ஆலோசித்து வருகிறார்கள்.

இக்கட்சி ஜாமீன்தொகையை இழந்ததின்மூலம் ரூ 18,2000 நஷ்டமடைந்திருக்கிறது.

மற்றொரு பொதுத் தேர்தல் சாத்தியம் என்று தோன்றுவதால், அதில் வெற்றிபெற என்ன செய்வது என்பது பற்றி நிர்ணயிக்கவும், மாஸ்கோவிலிருந்து என்ன தகவல் அல்லது உத்திரவு கிடைக்கிறது என்பதை அறியவும் இவர்கள் ஆவலுள்ளவர்களாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பொலிட் டெய்லி ஒர்க்கர் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில், கம்யூனிஸ்டுகள் தங்கள் போராட்டத்தை இனி ஒவ்வொரு தொழிற்சாலையிலும், தொழிலாளர் ஸ்தாபனத்திலும், தெருக்களிலும், 'கிளட்'களிலும் நடத்தும் என்று குறிப்பிட்டிருக்கிறார். —குளோப்

எகிப்து-இஸ்ரேல் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்

ஐ. நா. கமிஷனின் வேலை வெற்றிகரம்

லேக் ஸக்ஸஸ், பிப். 26—

எகிப்து இஸ்ரேல் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட ஒரு ஆண்டில் ஐ. நா. கமிஷன் வேலை வெற்றிகரமாக முடிந்திருக்கிறதென்று, ஐ. நா. மேற்பார்வையாளர் ஜெனரல் வில்லியம் ரெய்லி அறிவிக்கிறார். பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறிய அகதிகளில் லெபனானுக்குச் சென்ற 523 பேரும் ஜார்டனுக்குச் சென்ற 267 பேரும் எகிப்துக்குச் சென்ற 115 பேரும் திரும்பிவிட்டனர்.

—குளோப்

தொடர்புகள் அறுபட்டன!

புது டில்லியிலுள்ள பாகிஸ்தான் 'தொடர்பு' செயலகம் மூடப்பட்டது

புது டில்லி, பிப். 26—

பாகிஸ்தான் தீர்மானப்படி புது டில்லியிலுள்ள பாகிஸ்தான் தொடர்பு (லையஸான்) செயலகம் மூடப்பட்டுவிட்டது.

இந்தச் செயலகம் சென்ற ஜூன் மாதம்தான் திறக்கப்பட்டது. அகதிகள் சொத்து விஷயமாக 1949 ஜனவரியில் ஏற்பட்ட உடன்படிக்கையின் பேரில் அகதிகள் சொத்து விஷயமாக புள்ளி விவரங்கள் சேகரிக்கவும், அவைகளின் பரிவர்த்தனை, விற்பனை விஷயமாக உதவுவதற்காகவே இச்செயலகம் திறக்கப்பட்டது.

லையஸான் அதிகாரி எ. ஸயத் அகமத் அஷ்ரபும் அவருடைய சிப்பந்திகளும் பாகிஸ்தானுக்குத் திரும்பி விடும்படி, பாகிஸ்தான் உத்தரவு அனுப்பியிருக்கிறது.

இந்திய சர்க்கார், பாகிஸ்தானிலுள்ள தங்கள் தொடர்பு செயலகத்தைச் சென்ற ஆண்டே மூடிவிட்டது.

பார்லிமெண்டில் பற்கள் பேசின!

ஒரு மெம்பர் மற்றொருவரைக் கடித்துவிட்டார்!

ரோம், பிப். 26—

இதாலியின் புது கலப்பு மந்திரி மீது நம்பிக்கையிருப்பதாகத் தீர்மானம் சமீபத்தில் இதாலிய பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டபோது, மெம்பர்களுக்குள் அடிதடி ஏற்பட்டுவிட்டது. கிருஸ்துவ ஜனநாயகக் கட்சியினரும், கம்யூனிஸ்டுகளும் போட்ட சண்டையில் ஒருவர் மற்றொருவர் கை விரலைக் கடித்துவிட்டார். சபையில் அமைதி ஏற்பட்ட பின், 10 பார்லிமெண்ட் மெம்பர்களும், இரு மந்திரிகளும் காயத்திற்குச் சிகிச்சை பெற ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (குளோப்)

பசிவந்திட....!

மக்களிடையேயுள்ள பசிக் கொடுமையை ஒழித்தால்தான், உலகில் போர் ஒழிந்து அமைதி நிலவும்.

—லார்டுபாயிட் ஆர்

* * *

பசியால் வாடுவோர் எத்தகைய கொடுஞ் செயலையும் புரிய தயங்க மாட்டார்கள்.

—தளபதி ஐஸன்ஹோவர்

வியட்னும் எல்லையில் சீனக் கம்யூனிஸ்டுகள் குவிகின்றனர்

"டெயில் மெயில்" தரும் தகவல்

லண்டன், பிப். 26—

வியட்னும் எல்லையில் சீன கம்யூனிஸ்டு துருப்புகள், மேலும் மேலும் குவிந்து வருகின்றன வென்று 'டெயிலி மெயில்' விசேஷ நிருபர் வார்ட்பிரைஸ் அறிவிக்கிறார்.

இன்னும் இரண்டே மாதங்களுக்குள் அங்கு நிலைமை மிகவும் மோசமாகிவிடலாம் என்றும், இதுவே மூன்றுவது உலக யுத்தத்திற்கான முஸ்தீபாகக்கூட இருக்கலாம் என்றும், இங்கு கம்யூனிஸ்டுகள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் கொண்டோ, ஆசியாவில் அவர்கள் திட்டம் என்ன என்பது வெளிப்பட்டுவிடும் என்றும் அவர் கூறுகிறார்.

பிராங்கோவை எதிர்க்கும் பெண்!

மாட்ரிட், பிப்.—26

பிராங்கோவை எதிர்க்கும் வாலன்ஷிய சிமோட்டி புரனன்ரு மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார். பிராங்கோ ஆட்சியை எதிர்த்து துண்டுப்பிரசாரங்கள் விநியோகித்த இரகுலைய சகாக்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இது சிமோட்டியின் வழக்கை சிவில் அதிகாரிகள் ராணுவ கோர்ட்டுக்கு மாற்றிவிட்டனர் என்று தெரிகிறது.

—குளோப்,

மாலை மணி

சென்னை 27—2—50 திங்கட்கிழமை

கவனம் செலுத்துவார்களா?

சென்னை-மாநிலத்தின் தலை நகரம், தென்னாட்டில் சிறந்த நகரம், அழகிய பெரிய நகரம், அகில உலகத்தவரும் மதிக்கத்தக்க அழகிய கடற்கரையைக் கொண்ட நகரம், இயற்கை வளமும் செயற்கை வளமும் ஒருங்கே பெற்ற நகரம், வாணிகச் சிறப்பு வாய்க்கப்பெற்ற நகரம், பதின்மூன்று லட்ச மக்கள் நடமாடும் நல்ல நகரம்!

இப்பேர்ப்பட்ட பெருமைகள் வாய்ந்த சென்னைநகரில், பொதுக் கூட்டம் கூட்டுவதற்கு ஏற்ற ஒரு இடம் இல்லை! இயற்கையிலேயே இல்லாமற் போய்விட்டது என்பதல்ல, செயற்கை ஆட்சி முறை ஏற்ற இடம் ஒன்று இல்லாமற் செய்துவருகிறது. ஒரு நாகரிக நாட்டில் இத்தகைய நிலைமை இருந்துவருவது வெட்கப்பட வேண்டியது ஒன்றாகும். மக்களுடைய மனதிலே, ஆட்சி முறையின் இத்தகு அலங்கோலக்காட்சி கண்டு, வேதனையும் துக்கமும் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், ஆணவ ஆட்சி முறை அந்த வேதனையையும், துக்கத்தையும் ஏறிட்டுப் பார்க்க மறுக்கிறது.

சென்னையில் பொதுக் கூட்டம் கூட்டுவதற்கேற்ற இடம் ஒன்றில்லை! இருக்கும் இடங்களை ஒரு பக்கம் அரசாங்கம் காவல்காத்து வருகிறது; மற்றொருபக்கம்சென்னைநகரசபை காத்துவருகின்றன. இரண்டும் சேர்ந்து, பொதுமக்கள் கூடி தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான வகையில் ஏற்றப் பரந்த வெளி ஒன்றும் இருக்கக் கூடாது என்ற முறையிலே சட்டங்கள், விதிமுறைகள் இயற்றி வைத்திருக்கின்றன.

சென்னையில், 'ஐலண்டு கிரவுண்டு' ஜிம்கானா மைதானம், இரண்டு மைலுக்குமேல் நீண்டு பரந்து கிடக்கும் கடற்கரைவெளி, இவைகள்பொதுக் கூட்டங்கள்கூட்டுவதற்குஏற்ற இடங்கள்தாம். இந்த இடங்களில் பொதுக்கூட்டம் எதுவும் கூட்டக் கூடாது என்று தடைவுத்தரவு பிறப்பித்துள்ளது. 'ஐலண்டு கிரவுண்டும்', ஜிம்கானா மைதானமும் நகரின் நடுவிடங்களிலுள்ள பரந்த வெளிகள். பொழுது முழுவதும் காற்றோட்டமில்லாத இருட்டறைகளிலும், புழுக்கந்தரும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்துவிட்டு, மாலையில் வெளியேறும் மக்கள், நல்ல காற்றுவாங்கவும், உலாவவும், கூடியிருக்கவும் ஏற்ற இடங்களாகச் சென்னையில் இருப்பன, மேற்கூறிய இடங்களும், கடற்கரையிலுள்ள மணல் வெளியுமாகும். இவைகளில் பொதுக்கூட்டங்கள் கூட்டக் கூடாது என்று ஒரு அரசாங்கம் சொல்லுகிறதென்றால், அதை நாகரீக சர்க்கார் என்று எப்படி நல்லறிவு படைத்தோர் கூறமுன் வருவார்கள்? இந்த இடங்களில் கூட்டங்கள் கூட்டினால், அந்த இடங்களுக்கு என்னவித ஆபத்து ஏற்பட்டு விடும் என்று இந்த அரசாங்கம் அஞ்சுகிறது! ஆளவந்திருக்கும் கட்சியார் கூட்டம் போட்டால் மக்கள் கூடுவதில்லை; பிற எதிர்க்கட்சியினர் கூட்டங்கள் கூட்டினால் ஏராளமான மக்கள் கூடிவிடுகிறார்கள்; ஆகவே அப்படிக் கூடுவதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சியினர்க்கு—பிற நல்ல கட்சியினர்க்கு அளிக்காமலிருந்துவிடுவதே தம் கட்சிப்பலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏற்ற வழியாகும்; என்று கருதி அரசாங்கத்தார் அந்த இடங்களில் கூட்டங் கூட பொறாமையுணர்ச்சியின் காரணமாக மறுத்துரைக்கிறார்கள் என்பதல்லாமல், வேறு என்ன நேர்மையான காரணம் அதற்கு இருக்க முடியும்? இப்படிப்பட்ட கீழ்த்தர எண்ணத்தைக் கொண்டு ஒரு அரசாங்கம் ஆட்சிபுரிகிறது என்றால். இதைவிட வெட்கக்கேடான செயல் வேறு என்ன இருக்க முடியும். இயற்கையிலேயே ஒரு இடம் இல்லை என்றாலும், பொதுக்கூட்டங்கள் கூட்டுவதற்கு என்று ஒரு இடம் அமைத்துத்தரவேண்டியதல்லவா ஒரு நல்லாட்சி முறையின் நாகரீகமான கடமையாகும். ஆனால், இங்கே இருக்கும் நல்ல இடங்களையே பயன்படுத்த மறுக்கிறதே, ஒரு அரசாங்கம்! வெட்கம்! வெட்கம்!! சென்னை மாநிலத்தில் புதிதாக உழுது பயிரிடுவதற்கான முறையிலுள்ள கரம்பு நிலங்களும், தரிசு நிலங்களும் மாவட்டங்கள்தோறும் ஏராளமான அளவில் இருக்க, அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, 'ஐலண்டு கிரவுண்டை' உழுது சோளப்பயிரும், வள்ளிக் கிழங்குப்பயிரும், நெற்பயிரும் விளைவித்து 'உணவு உற்பத்தி' செய்கிறது சென்னை அரசாங்கம்! இதைவிட 'வெளிப்பகட்டு'த் தன்மை வேறு என்ன இருக்க முடியும்! பொதுக் கூட்டம் கூட்டுவதற்கான இடத்தையும் பாழ்படுத்தி, 'வெளிப்பகட்டு' வேலையும் வீணாகச் செய்துவருகிறார்கள் அகிம்சை ஆளவந்தார்கள்!

உள்ளபடியே சென்னை மக்களின் நலத்திற்காக என்று ஏற்பட்டிருக்கும் சென்னை நகரசபை, பொதுக் கூட்ட மைதானம் ஒன்றை அழகுற ஏற்படுத்தியிருக்க வேண்டும்! அந்தக் கடமையைச் செய்யாவிட்டாலும், இருக்கும் இடங்களையாவது கூட்டம் கூட்டிக் கொள்ள அனுமதிக்கலாமல்லவா? நகரசபை தனக்குச் சொந்தமான இடங்களாகிய பூங்காக்களிலும், மற்றும் பல இடங்களிலும் கூட்டங்கள் கூட்டக் கூடாது என்று கூறுகிறது. கூட்டங்கள் கூட்டுவதால், பூங்காக்களின் எழிலும், அதிலுள்ள பூஞ்செடிகளும் கெட்டுவிடுகின்றன என்ற எண்ணத்தின் காரணமாக, பூங்காக்கள் மறுக்கப்படுகின்றன என்றால், யாரும் எவ்விதத் தடையும், கட்டுப்பாடுமின்றிக் கூட்டம் கூட்டிக் கொள்ள ஒரு தக்க இடத்தை ஏன் நகரசபை ஏற்படுத்தக் கூடாது? பீப்பிள்ஸ் பார்க் போன்ற பரந்த இடங்களில் ஒரு பகுதியைக் கூட்டங்கள் கூட்டுவதற்கு என்று ஏன் ஒதுக்கித்தரக் கூடாது? இதுவரையிலும் தான் அத்தகைய நாகரிகக் கண்ணோட்டம் செல்லவில்லையானாலும், இனிமேலாவது அதுபற்றிய விஷயத்தில் கண்ணோட்டத்தைச் செலுத்த நகரசபை முன்வருமா?

இப்பொழுது சிறு சிறு சந்துபொந்துகளிலும்தான் கூட்டம் போட முடிகிறது என்றால், இதைக் கண்டு அரசாங்கமும் நகரசபையும், வெட்கப்பட வேண்டாமா? சென்னைநகரத்தின் நாகரிகம் இந்த வகையில் காப்பாற்றப்பட வேண்டுமானால், பொது மக்கள் கூடி தங்கள் தங்கள் கட்சிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கேற்ற வகையில், நகரின் நடுவிடத்தில் ஒரு பெரிய பொதுக் கூட்ட மைதானம் நிலைநாட்டும் முயற்சியில், ஆளவந்திருக்கும் அரசாங்கமும், நகரைக் காக்க வந்திருக்கும் நகரசபையும் ஈடுபட வேண்டும்; கவனம் செலுத்த வேண்டும்; கடமையை நிறைவேற்ற வேண்டும்? இனியேனும் கவனம் செலுத்துவார்களா?

அறிவுக் கதிர்!

உலகம்திருத்தமுறும் வரையில், நல்ல சமுதாயம் ஒன்றின் உள்ளத்தில், புரட்சிக் கருத்து வேரூன்றியிருக்க வேண்டும்.

— பண்டிதநேரு

கிழக்கு-மேற்கு தகராறுகள் வலுக்கும்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் தகராறு இனி வலுக்குமேயன்றி, குறையாது என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

காமின்பார்முடன் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் உறவு நீடிப்பதும் சந்தேகமே என்று சொல்லப்படுகிறது.

பல்கேரியாவுடன் அமெரிக்கா தன் ராஜீய உறவை அறுத்துக் கொண்டு விட்டது. ஹங்கேரியுடனும் உறவு அறுத்துக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ரஷ்ய ஆதிக்கத்திலுள்ள நாடுகள் இந்த உறவை அறுத்துக் கொள்ளவே குறியாக இருக்கின்றன என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

"ஆரியமாயை" வழக்கு விசாரணை ஆரம்பம்

மீண்டும் மார்ச்சு 13-க்கு ஒத்திவைப்பு

திருச்சி, பிப். 25—

இன்று காலை 11 மணிக்கு திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்பு "ஆரியமாயை" வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்குத் தொடரப்பட்டபின் இது எட்டாவது விசாரணை தினமாகும். இதுவரை, ஒத்திப் போடப்பட்டு வந்து இன்றுதான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தோழர் சி. என். அ. 'திராவிடப்பண்ணை' தோழர் கண்ணப்பன் ஆகிய இருவரும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர். நூல் எழுதியமைக்காக தோழர் சி. என். அ. அவர்கள் மீதும், அந்நூலைப் பிரசுரித்தமைக்காக தோழர் கண்ணப்பன் அவர்கள் மீதும், ஆட்சியாளரால் வழக்கு தொடரப்பட்டிருப்பது தோழர்கள் அறிந்ததேயாகும்.

சர்க்கார் தரப்பில் பப்ளிக் பிராசிகியூட்டர் தோழர் செங்கமலம் அவர்களும், குற்றஞ் சாட்டப்பட்டிருப்போர் சார்பில் தோழர் விடுத்தாசலம் அவர்களும், தோழர் சுப்பையா அவர்களும் ஆஜரானார்கள்.

சர்க்கார் தரப்பு சாட்சியாக மாஜிஸ்டிரேட் கோர்ட் குமாஸ்தா விசாரிக்கப்பட்டார். ஏனைய சர்க்கார் தரப்பு சாட்சிகள் வராததால் வழக்கு மார்ச்சு 13-ந்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கோர்ட்டிற்கு தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். வி. லிங்கம், டி. எம். முத்து, மற்றும் பல உள்ளூர் இயக்க அன்பர்கள் வந்திருந்தனர்.

வழக்குக்கு வருவதற்காக தோழர் சி. என். அண்ணாத்துரை நேற்றிரவு 8 மணக்கு காஞ்சியிலிருந்து தோழர்கள் காஞ்சி கவுன்சிலர் சி. வி. ராசகோபால், அரங்கண்ணல் ஆகியோருடன் காலை நாலு மணிக்கு இங்கு வந்து சேர்ந்தார்.

கோர்ட்டிற்குச் சென்று திரும்பியதும், திருச்சி இயக்கத் தோழர்களைச் சந்தித்துப் பேசியபின் பிற்பகல் இரண்டு மணிக்கு, அறந்தாங்கிபொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். (ஈ. நி.

முற்போக்கு சக்திகளுடன் உறவு கொள்ளாதே

சர்க்கார் சிப்பந்திகளுக்கு எச்சரிக்கை

இந்திய சர்க்கார் கெடுபிடி!

புதுடில்லி, பிப் 24—

சோவியத் நண்பர்கள் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இந்திய பீபிள் தியேட்டர்கள் சங்கம், ஆகியவை கம்யூனிஸ்டு சம்பந்தப்பட்ட அரசியல் ஸ்தாபனங்கள் என்றும், சர்க்கார் சிப்பந்திகள் இவைகளில் உறுப்பினர்களாக இருக்கக்கூடாதென்றும் இந்திய சர்க்கார் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இந்த ஸ்தாபனங்களுக்கு நிதி உதவியும் சர்க்கார் சிப்பந்திகள் அளிக்கலாகாது என்று. உள்நாட்டு மந்திரி காரியாலய அறிக்கையில்கூறப்பட்டிருக்கிறது. இம்மூன்று ஸ்தாபனங்கள் இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளால் நடத்தப்படுபவை

இஸ்ரேல் மீது அரபு பகிஷ்காரம்

இஸ்ரேல் மீது அரபுகள் எடுத்துள்ள பகிஷ்கார நடத்தையினால், யூதர்களின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் தங்கள் முக்கிய உணவு ரேஷன் சப்ளையையும் குறைத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

எவ்விதத்திலும் சப்ளை கிடைக்க வழியில்லாததால் ரேஷனைக் குறைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று இஸ்ரேல் சப்ளை மந்திரியே கூறினார்.

இஸ்ரேலிடம் கையிலும் பணம் இல்லை இனியும் கடன் கொடுப்பவரும் எவரும் இல்லை. அமெரிக்கா ஏற்றுமதி இறக்குமதி பாங்கி அனுமதித்த 100,000,000 டாலர் கடன் தொகையில் 93000,000 டாலர் ஏற்கனவே இஸ்ரேல் வாங்கி விட்டது.

யூதர்கள் தங்களுடன் பணம் கொண்டுவருபவர்களே முதலில் குடியேற அனுமதிக்கப்படுவாராம்.

மலேயாவில் அரிசி உற்பத்தி

லண்டன், பிப் 25—

மலேயாவில் இந்த ஸீஸனில் அரிசி உற்பத்தி மிகவும் அதிகமாயிருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வளவு அதிகமான விளைச்சல் மலேயா சரித்திரத்திலேயே இதுவரை இல்லாதபடியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இவ் வருஷ மலேயா அரிசி உற்பத்தி 400,000 டன்னுக்கு மேல் இருக்கும் என்று தெரிகிறது.

அங்கேரிய அழகி கைது

பிரஸ்லல்ஸ், பிப். 26—

மாடேம் கார்னவால் என்ற மாற்றுப் பெயரை வைத்துக்கொண்டிருந்த நேடாலி ஹெலிடன் என்கிற ஹங்கேரிய அழகியைப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர். கள்ள நாணயம் வெளியிடுவது, செக்குகளில் பொய்க் கையெழுத்திடுவது இவைகளை செய்துவந்த ஒரு கொள்ளை கோஷ்டியில் இவர் சம்பந்தப்பட்டவராம்.

இக்கோஷ்டியின் தலைவர் பிரூசல்ஸ் சிறையில் இருக்கிறார். இக்கோஷ்டியைச் சேர்ந்த 80 பேர் பாரிஸில் விசாரிக்கப்படவிருக்கின்றனர். மாடேம் கார்னவாலும் விசாரணைக்காக பாரிஸுக்கு அழைத்துச் செல்லப்படுவார். —ருபேர்ட்

அடக்குமுறை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நைதிகளுக்கோ, அவர் சார்பில் வாதிடும் வழக்கறிஞர் கட்கோ அதிகாரம் கிடையாதாம்!

இம்மாதிரி பார்த்துக் கொண்டே போனால், மசோதாவின் மகிமை அளவிறந்து காணப்படும். விரிவஞ்சி மசோதாவின் கருத்தினை மட்டும் எடுத்துக் காட்டியுள்ளோம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இம்மசோதா ஒரு பயங்கர மசோதா—பட்டேலின் யதேச்சாதிகார உள்ளத்தின் ஊற்று—பாதுகாப்பு என்ற முறையிலே மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைப் பெட்டிப்பாம்புகளாகச் செய்யும் மசோதா—கம்யூனிஸ்டுகளைச்சாக்கிட்டு சமதர்மக் கோட்பாடுகளுக்கே ஊறு செய்யும் மசோதா—ஜனநாயகத்தை வழியனுப்பி சர்வாதிகாரத்தை வரவேற்கும் மசோதா-என்று மக்கள் கருதும்படியான முறையிலே அமைந்துள்ளது.

அமைதியை நிலவச் செய்வதாகக் கருதிக்கொண்டு, இத்தகைய அதிதீவிர சட்டங்களை இயற்றுகிறது அரசாங்கம்; ஆம்; அமைதி நிலவவேண்டும் என்றுதான் நாமும் அவாவுகின்றோம். ஆனால், பட்டேல் போகும் பாதை அந்தஅமைதியைக் கலைத்துவிடுமோ என்று அஞ்சவேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

மலேயாவுக்கு இந்திய ஜவுளி ஏற்றுமதி

சிங்கப்பூர், பிப். 26—
மலேயாவுக்கு இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி மிகவும் அதிகரித்திருக்கிறதென்றும், கண்ட்ரோல்களை இந்திய சர்க்கார் நீக்கியதே இதற்குக் காரணம் என்றும் மலேயாவிலுள்ள இந்திய வர்த்தகக் கமிஷனர் சர்தார் சேதுஜோத்சிங் கூறுகிறார்.

ஜவுளியின் உயர்ந்தபட்ச விலை, ஏற்றுமதி விலை இவைகளை நிர்ணயித்திருப்பதை அகற்றிவிட வேண்டியது அவசியமே என்று இந்திய சர்க்கார் கருதியபோதிலும், ஜவுளியின் விலை ஏகத்தாறுக ஏறிவிடக் கூடாதென்றே அது விரும்புகிறது என்று அவர் கூறினார்.

இப்பொழுது அயல் நாடுகளிலுள்ள ஜவுளி வியாபாரிகள் இந்தியாவிலிருந்தும்ஜவுளியை வரவழைக்கலாம் என்று வசதி செய்துதரப்பட்டிருக்கிறதாம்.

நவீன ரோட்டரி இயந்திரங்கள்

மணிக்கு 40,000 பிரதிகள் அச்சிடும்

லண்டன், பிப். 25—
மணிக்கு 46,000 பிரதிகள் அச்சிடக்கூடியதும், இரு கலர்களில் பிரசுரிக்கக்கூடியதுமான நூதன ரோட்டரி இயந்திரம் பாட்னாவின் பத்திரிகைகளான சர்ச்லைட் நியூஸ், இந்திய நேஷன் பத்திரிகைகள் சொந்தக்காரர்களால் வரவழைக்கப்படவிருக்கிறது. லீட்ஸைச் சேர்ந்த க்ரேப்ட்ரீ கம்பெனியார் இந்த இயந்திரத்தை சப்ளை செய்கின்றனர். மற்றும் இரு பிரபல பத்திரிகைகள் கூட இம்மாதிரி இயந்திரங்களுக்கு ஆர்டர் செய்திருக்கின்றனவாம்.

பாட்னா பத்திரிகை முதலாளிகள் 1946-ல் கொடுத்த ஆர்டர்தான் இப்பொழுது நிறைவேற்றப்படுகிறதாம். இந்த இயந்திரம் மே மாதம் வந்து சேரும் என்று தெரிகிறது. இந்த இயந்திரம் ஒரே சமயத்தில் 32 பக்கங்களை அச்சிடக்கூடியதாம்.

இரு முனைகளிலும் ரஷிய கண்ணோட்டம்

லண்டன், பிப். 26—
ஆசியாவில் தன் விஸ்தரிப்பு திட்டத்தை சிறுகச் சிறுக நடத்துவதுடன் ஐரோப்பாவில் தன்பிடிப்பை விடாமல் ரஷியா நடவடிக்கையை எடுத்து வருகிறது என்று இங்குள்ள ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக மேற்கு நாடுகளுடன் உறவை வைத்துக்கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கு வைத்துக்கொள்ளும்படி தன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளுக்கு ரஷியா உத்திரவிட்டிருப்பதாக இவ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதுபற்றி மாஞ்செஸ்டர் கார்டியன் எழுதுகையில் ரஷியா ஒரு முனையில் எவ்வளவுக்கு முன்னேறுகிறதென்றும் மற்றொரு முனையில் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு தன் பிடிப்பை பலப்படுத்திக் கொள்கிறது என்றும் எழுதியிருக்கிறது.

பீகாரில் சரித்திரச் சின்னங்கள்

பாட்னா, பிப். 25—
பீகாரில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் சரித்திர சம்பந்தமான சின்னங்கள் இருக்கின்றனவென்றும், அவைமூலம் எவ்வளவோ தகவல்கள் கிடைப்பதால் அவை பத்திரமாகப் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம் என்றும் பாட்னா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஏ. எஸ். அல்டேகர் கூறுகிறார். இதற்கான சாவே எடுத்து ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும் என்றும், இதற்காக ரூ. 400,000 செலவாகும் என்றும் அவர் கூறுகிறார். —குளோப்

மங்களூரில் 144!

மங்களூர், பிப். 23—
இங்கு இன்னும் ஒருமாத காலத்திற்கு எவ்விதக் கூட்டமோ, ஊர்வலமோ, 5 பேருக்கு மேற்பட்டு பொதுவிடத்தில் நிற்பதோ கூடாதென, சப்டிவிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் 144 பிரிவு தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். கன்னட மோட்டார் தொழிலாளர் சங்கத்தார் ஸ்ட்ரைக் செய்வதாக இருப்பதின் விளைவாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

யு. எஸ்.ஸில் 10000 பெண் விமானிகள்

லண்டன், பிப். 26—
யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப் படையில் சுமார் 10,000 பெண்கள் விமானிகளாகவும் இதர பொறுப்பிலும் வேலை செய்து வருகிறார்கள். 1945ல் இவர்கள் தொகை 5122 ஆக இருந்தது. 1949ல் 9678 பேர் ஆகதொகை பெருகியிருக்கிறது.

குலாலம்பூருக்கு ரப்பர் வீதிகள்

குலாலம்பூர், பிப். 26—
உள்ளூரிலேயே தேவையான ரப்பர் பொடி கிடைக்கும் பட்சத்தில் குலாலம்பூரின் முக்கிய தெருக்களை எல்லாம் ரப்பரினாலேயே போடப்பட்டுவிடும் என்று தெரிகிறது. முனிசிபல் என்ஜினியர்கள் இவ்விஷயமாக சிரத்தை எடுத்து வருகின்றனர். —குளோப்.

விவாக ரத்து அதிகரிப்பு!

ஜோஹோர்பாரு, பிப். 26—
ஜோஹோரில் 1949-ல் பதிவான முஸ்லிம் விவாகங்களில் மூன்றில் ஒரு பங்கு விவாக ரத்தில் முடிந்திருக்கிறது என்று வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது.

இதற்குப் பொருளாதாரநிலைமை ஒரு காரணமென்பதுடன், புருஷர்கள் சொல்லாமல் ஓடிப்போய் விடுவதும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது.

1949-ல் பதிவான விவாகங்கள் 4771 இதில் விவாக ரத்து 1494. —குளோப்

தோழர்கள் கவனிக்க

'இனி நடப்பவை' என்ற தலைப்பில் வெளியிடுவதற்கென 'மாலை மணி'க்கு அனுப்பப்படும் செய்திகள் யாவும் **மூன்று நாட்களுக்கு முன்னதாகவே** அலுவலகத்திற்குக் கிடைக்குமாறு செய்தல்வேண்டும். காலம் கடந்து வரும் செய்திகள் பிரசுரிக்க இயலாமற் போகுமென்பதை யறியவும், (ஆ-ர்)

வைத்திய வள்ளல் மறைவு

திருவண்ணாமலை நகரசபை அனுதாபம்

வைத்திய வள்ளல் ஈ. வெ கிருஷ்ணசாமி அவர்கள் இறந்தமை எய்தியமைக்கு, திருவண்ணாமலை நகரசபை தனது ஆழ்ந்த அனுதாபத்தை, பெரியார் அவர்கட்கும் தோழர் சம்பத்திற்கும் தெரிவித்து, ஒரு தீர்மானம் 16-2-50-ம் தேதி நிறைவேற்றியது. (உ. நி)

அதிர்ச்சியினால் தலைவழுக்கை ஏற்படும்

லண்டன், பிப். 25—
ஒரு விபத்து ஏற்பட்டதினால் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக, 16-வயதுள்ள ஒரு பிரிட்டிஷ் சிறுவனுக்கு தலைவழுக்கையாகிவிட்டது இந்த விபத்து நேர்ந்ததற்காக, ரூ 16750 நஷ்ட ஈடு அச்சிறுவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் தேன் சேகரிப்பு

லண்டன், பிப். 26—
ஆஸ்திரேலியாவில் தேன் சேகரிப்பு மிகவும் அதிகரித்து வருவதுடன் லாபகரமான தொழிலாகவும் இருந்துவருகிறதாம். தேனீக்கள் எங்கெல்லாம் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் தேன் கூடுகளை மோட்டார் மூலமும் விமானமூலமும் கொண்டு சென்று வைக்க வசதி இருப்பதால் தான் ஏராளமாக தேன் சேகரிக்கப்படுவது சாத்தியமாக இருக்கிறதாம்.

நன்றி!

மதுரை மாவட்டக் கழக வேண்டுகோளின்படி மாவட்ட சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாய் நடத்திக்கொடுத்த பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்கும், அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கும், மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், தங்கள் தங்கள் ஊர்களில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, கூட்டங்களை வெற்றியுடன் நடத்திக்கொடுத்த அன்பர்களுக்கும், எதிர்பாராதவிதமாய் கார் ரிப்பேரானதினால் ஏனைய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த ஊர்களாகிய தேனி, போடி, மேலூர் முதலிய ஊர் கழகத் தோழர்களுக்கு அன்பு கலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிப்பதுடன் தேனிக்கு ஏப்ரல் 12-ம் தேதி முடிவு செய்தது போக ஏனைய இந்த ஊர்களுக்கும் கூடிய சீக்கிரம் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
தா. ஆவடையப்பன்
செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. கழகம்
சோழவந்தான்

இனி நடப்பவை

அய்யம்பேட்டை:— இவ்வூர் தி. மு. க. அமைப்புக்கூட்டம், 28-2-50 மாலை 5 மணிக்கு, முன்னாள் திராவிடர் கழகத் தலைவர் தோழர் சா. இராமச்சந்திரன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். தி. மு. கழக ஆதரவாளர்களும், பக்கத்து ஊர் தி. மு. க. உறுப்பினர்களும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—எட்டாம் ஆரம்பப் பள்ளிகளின் [illegible] சங்கக் கூட்டமொன்று, 27-2-50 இன்று மாலை 5 மணிக்கு இராஜமன்னார் ஆரம்பப்பள்ளி (94-95, புதுத் தெரு, மண்ணடி) யில் நடைபெறும். தோழர் பி. எம். வேலாயுதபாணி எம். எல். ஏ. தலைமை வகிப்பார்.

பொருந்தாமணம் நிறுத்தப்பட்டது

பன்னீர் செல்வம் கழகத்தோழர்களின் அரும் பணி!

தூத்துக்குடி, பிப். 25—
தூத்துக்குடி சண்முகபுரத்தில் குடியிருக்கும் சு. பொன்னையா நாடார் என்ற 70 வயதுடைய பெரியவர், தன் குடும்ப வாரிசுக்கு பிள்ளை இல்லை என்ற காரணத்தால் 60 வயதுடைய பாக்கியம் என்ற மனைவி இருக்கும்போதே வேறு திருமணம் செய்துகொள்ளும் முடிவுடன் "சடையன் விளை" என்ற ஊரிலுள்ள திரவியம்மாள் என்ற பாட்டியின் வீட்டில் வளர்க்கப்பட்ட தவமணி என்ற 13 வயதுடைய பெண்ணை ஆபிரகாம், ஞானமுத்து என்ற தரகர்களின் மூலம், பெண்ணுக்கும், திரவியம்மாளுக்கும் மாப்பிள்ளையின் வயதைக் கூறாது, மாப்பிள்ளை வாலிபனென்றும், பணம் படைத்தவனென்றும் வஞ்சக மொழி பேசி, திருமணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து 20-2-50 திங்கட்கிழமை சடையன் விளையைவிட்டு பெண்ணைக் கடத்தி தூத்துக்குடிக்குக் கொண்டு வந்து சு. பொன்னையா நாடார் வீட்டில் தங்கவைத்தனர்.

அன்று காலை பெண்ணை அலங்கரித்தனர். அதுவரையிலும் பெண்ணுக்கு மாப்பிள்ளையைக் காட்டவில்லை, மாப்பிள்ளை யார் என்றும் தெரியாது. பின் சு. பொன்னையா நாடார் மாப்பிள்ளைக்கோலத்துடன் வரவே, இவன்தான் தன் மாப்பிள்ளை என்பதை அறிந்த பெண் கதறி அழவே, அதேதெருவில் இருக்கும் பன்னீர் செல்வம் கிளைவுக் கழகத்தார் அறிந்து உடனே பொருந்தா மணத்தைத் தடை செய்யப் புறப்பட்டனர். பன்னீர் செல்வம் கிளைவுக் கழகத்தார் மாப்பிள்ளைக் கோலம் பூண்ட பொன்னையா நாடாரை அணுகி, இது கூடாது என்று தடுத்துக் கூறினர். பின் பெண்ணிடம் சென்று உண்மையைக் கேட்க பெண் தன்னை வாலிபனுக்கே மண முடித்துக்கொடுப்பதாக வஞ்சகமொழி பேசி அழைத்து வந்து கிழவனுக்கு மணமுடித்துக் கொடுக்கத் துணிந்துவிட்டார்கள், தான் கிழவனை மணக்க முடியாது என்று கூறியும், தனக்குத் தாய் தந்தையர்கள் இல்லை என்றும் கூறினள். உடனே மேற்படி கழகத்தார் பொருந்தா மணத்தைத் தடுத்து பெண்ணைத் தங்கள் பாதுகாப்பில் தோழர் செல்லத்துரை வீட்டில் வைத்து விட்டு, பெண்ணின் உறவினர்களை அழைத்துவந்து பெண்ணைப் பாதுகாப்புடன் அவர்களிடம் ஒப்படைத்ததுடன், கிழ மாப்பிள்ளையான சு. பொன்னையா நாடாருக்கு நல் அறவுரைகள் கூறி பெண்ணுக்குண்டான போக்குவரவுச் செலவினங்களுக்கும் மேலும் ரொக்கமாக 50 ரூபாயும் வாங்கி பெண்ணுக்குக் கொடுத்து 23-2-50-ல் பெண்ணை உறவினர்களுடன் ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

கோவை மாவட்ட பீடித் தொழிலாளர் கோரிக்கை

ஈரோடு, பிப். 24—
20-2-50ல் ஈரோடு பீடித்தொழிலாளர் சங்கத்தில் கோவை ஜில்லா பீடித் தொழிலாளர் பிரதிநிதிக் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எஸ். ஏ. [illegible] தலைமைவகித்தார். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

ஈரோடு டைமன் பீடி பாக்டரி பாக்கு ஷாப் பாக்டரித் தொழிலாளர்களுக்கு போனஸ்கொடுக்கும்படி 7-2-49ல் உத்தரவு செய்யப்பட்டது. உத்தரவை ஈனதுவரையில் அமுல்நடத்தாமல் இருப்பதற்கு இக் கூட்டம் வருந்துவதுடன் அமுல் நடத்தும்படி சென்னை அரசாங்கத்தாரை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

போனஸின் காரணமாக முறையே 20-2-49ல் 5 தொழிலாளிகளும், 22-3-49ல் பல தொழிலாளிகளும் நீக்கப்பட்டதைக் குறித்து இக் கூட்டம் வருந்துகிறது. நீக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வாங்கிக்கொடுக்குமாறு சென்னை அரசாங்கத்தாரை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தற்சமயம் கோவை ஜில்லாவில் 49 பீடி பாக்டரி முதலாளிகளின் பேரில் அரசாங்கத்தார் பீடித் தொழிலாளர்களுக்காக தொழில் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இதையறிந்த பீடி முதலாளிகள் பித்தலாட்டம்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதாவது, பிரித்துவைக்கும் சூழ்ச்சி, பாக்டரியை லாக் அவுட் செய்வது. ஆள் நீக்கம் செய்வது. சர்வீஸ் இல்லாமல் செய்வது. பீடித் தொழிலாளிகளை பழிவாங்குதல். கண்மூடித்தனமாய் பீடி முதலாளிகள் நடத்துவதை அரசாங்கத்தார் இது விஷயத்தில் தக்க நடவடிக்கையெடுத்துக் கொள்ளவேணுமாய் இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இ. ஏ. பிரான் தொழிலாளர் பீடி கம்பெனியார் பாக்டரி சட்டத்தை தகர்த்தெறியும் நோக்கத்துடன் இறுமாப்புகொண்டு பாக்டரியை கதவடைப்புசெய்ததை இக் கூட்டம் வன்மையாய்க் கண்டிப்பதோடு கதவடைப்பு செய்த முதலாளிகள்பேரில் நம் அரசியலார் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேணுமாய் இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(ஓ. நி.)

சரத்போஸ் மறைவுக்கு அனுதாபம்

தாராபுரம், பிப். 25—
தாராபுரம், நேதாஜி வாலிபர் சங்கக் கூட்டமொன்று 22-2-50 தேதி சங்கக் கட்டிடத்தில் நடந்த அவசர வாலிபர் கூட்டத்தில் இந்தியாவின் மாபெரும் தலைவர் சரத்சந்திர போஸ் காலமானதற்காக அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் கூட்டம் சில நிமிஷ நேரம் எழுந்து மௌனமாக நின்று இச் சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்கு தெரிவித்துக்கொள்ளப்பட்டது. 23—2—50ல் இவ்வூரில் காலை 11 மணிவரை கடைகள் மூடப்பட்டது, மாலை 7 மணிக்கு இச்சங்கத்தின் ஆதரவில் ஜண்டா சவுக்கில் சங்கத் தலைவர் கோணப்பநாயக்கர் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் இச்சங்கச் செயலாளர் கெ. லக்ஷ்மணனும், எஸ். அங்கண்ண நாயுடுவும், சோஷலிஸ்ட் காரியதரிசி சாகுல்ஹமீதும் சரத்போஸின் தியாகத்தைப்பற்றியும் அவர் நம் நாட்டிற்குசெய்த மாபெரும் சேவைகளைப்பற்றியும் பேசினார்கள்.

(ஓ—நி)

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

வேலூர்

வேலூர், பிப். 14—

வேலூர் வேலப்பாடி திராவிட முன்னேற்றக் கிளைக் கழக துவக்க விழாவை முன்னிட்டு, 12—2—50 ஞாயிறு மாலை 6-மணிக்கு திரௌபதியம்மன் கோவில் வெளியில் உள்ள வெளியில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பந்தலில், தாளங்காடித் தோழர் ஏகாம்பரம் திராவிடப் பண்பாட, பொதுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தோழர் கோவிந்தன் அவர்களைத் தலைமை தாங்குமாறு தோழர் எம். பி. சாரதி அவர்கள் முன்மொழிய, தோழர் வே. அ. இளஞ்செழியன் வழிமொழிந்தார்.

தோழர் வல்லாளன், முன்னேற்றக் கழகம் பொது மக்களுக்குச் செய்யும் பணியை விளக்கிக் கூறிப் பொது மக்களைக் கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்துப் பேசிய தோழர் வேலு-வில்லவன், தற்கால அரசியல் நிலையைக் குறித்தும் காமன்வெல்த் மகாநாட்டிற்குச் சென்ற பண்டித நேரு இலங்கைவாழ் இந்தியர்களைக் கவனிக்காது அலட்சியப்படுத்தியதையும், வடநாட்டுத் தலைவர்கள் மாதா மாதா என தலையிலிருந்து தோன்றியவர்களைப் போலவும், இலங்கைவாழ் இந்தியர்களை காலிலிருந்து தோன்றியவர்களைப் போலவும் கொண்டிருக்கும் போக்கைக் கண்டித்தும் பேசி, கழகத்தை யாவரும் ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

க. அன்பழகன்

அடுத்துத் தோழர் க. அன்பழகன் அவர்கள் மிக விரிவான தொரு சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவாளருக்கும் மற்றத் தலைவர்களுக்கும் தி. மு. கழகங்கள் சார்பாகவும் மாலைகளணிவிக்கப்பட்டன.

தோழர் அன்பழகன் அவர்கள் பேசுகையில், காலம் மாறுகின்றது, கருத்துக்கள் வளருகின்றன, அறிவு ஒளி வீசுகிறது, எனவேதான், வழக்கமாக-மாறாத கதை நடிக்கப்படும் இடத்தில், பகுத்தறிவுச் சொற்பொழிவு நடைபெறுகிறது என்றும், இன்றைய நிலையில் 'சுயராஜ்யம்' கிடைத்துவிட்டது என்ற எக்களிப்பும், 'குடியரசு' அமைத்துவிட்டோம் என்ற பூரிப்பும் ஆளவந்தார்களுக்கு மட்டுமேதான்-ஏற்பட்டுள்ளதென்றும், காங்கிரஸ்காரர்களிலேயே கலகுழப்பு, இவை வேம்பாக ஆகிவிட்டனவென்றும், பொது மக்களுக்கோ, சோற்றுக்கு வழியின்றி, கட்டத் துணியின்றி, ஒண்டக் குடிசைக்கும் இடமின்றி தவிக்கும் ஏழைகளுக்கோ, சுயராஜ்யம், சோகராஜ்யமாகவும், குடியரசு, தடியரசாகவும் தோன்றுகின்றதென்றும் கூறினர். இந்நிலைக்கு ஆளாகியுள்ள மக்கள், அறிவுத்தெளிவு பெற்று, தன்னம்பிக்கைபெற்று, நல்லாட்சி மலர பாடுபடவேண்டுமென்றும், கருத்துக்கள் தமிழர் நல்வாழ்வை உயர்நெறியை அழிக்கும் வேலை செய்வதாக இருக்கக்கூடாதென்றும் விளக்கினர். சுமார் 2-மணி நேரம் சொற்பொழிவாற்றினர்.

கடைசியாக தலைவர் முடிவுரையில், சொற்பொழிவாளர் உரையாற்றியதைச் சிந்திக்கும்படி கேட்டுக்கொண்ட பின், செயலாளர் வே. அ. இளஞ்செழியன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

நெகமம்

நெகமம், பிப். 20—

சென்ற 18—2—50 மாலை 6-30க்கு நெகமம் தி. மு. கழக சார்பில் பொள்ளாச்சி தோழர் பி. ஆறுமுகம் (கவுண்டர்) அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. வேலூர் தோழர் சி. பி. சிற்றரசு, பொள்ளாச்சி தோழர் பி. எஸ். இராமானுசம், ஞா. செ. கிருட்டினசாமி, உடுமலை தங்கவேல் ஆகியோர் "அரசியலும் சமுதாயமும்" என்பது பற்றி பல அரிய விஷயங்களைப் பேசினர். தலைவர் முடிவுரையுடன் நன்றிகூறலுடன் இரவு 9-30க்குக் கூட்டம் இனிதுமுடிவுற்றது. கூட்டத்திற்கு சுமார் 1500 பேர் வந்திருந்து அமைதியுடன் சொற்பொழிவைக் கேட்டனர்.

கோவில்பட்டி

கோவில்பட்டி, பிப். 22—

21—2—50 செவ்வாயன்று இவ்வூர் தி. மு. க. சார்பாக, தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர் எம்.எஸ். சிவசாமி தொழிலாள வர்க்கத்துக்குத் துரோகம் புரிந்துவரும் முதலாளித்துவ காங்கிரஸ் சர்க்காரின் கொடுமைகளையும் இன்னும் தொழிலாள மக்கள் 'மஞ்சள் மகத்துவத்தில்' ஏமாந்துவிடக்கூடாதென்றும் பேசினர். அடுத்துத் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள், ஐ. நா. சபை, காமன்வெல்த் உறவு இவைகள்மூலம் கழகமும் இந்நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியாத காங்கிரஸ் சர்க்கார், மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கி வரும் விதத்தைப் பற்றிப் பேசினர். கடைசியாகத் தோழர் என்.எஸ். இளங்கோ அவர்கள், பாசிசத்தையும், மடமையையும், ஒழிக்கத்தான் திராவிட கழகமும், தி. மு. கழகமும் பாடுபடுகிறது என்றும், நம்மிடம் பிளவை எதிர்பார்த்த காங்கிரஸ்காரர்கள் ஏமாந்துபோனார்கள் என்றும், நாட்டு விடுதலைக்காக வீட்டுக்கொரு இளைஞர்கள் புறப்பட்டு எங்கள் அணிவகுப்பில் சேருங்கள் என்றும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

காளூர்

காளூர் (போளூர்), பிப். 18—

இங்குத் தோழர்களான, தோழர் கோவிந்தராசன் அண்ணாமலை இவர்களால் ஒரு பொதுக் கூட்டம் 12-2-50 ஞாயிற்றுக்கிழமை, ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போளூர் தி.மு. கழகத் தோழர்கள் 20 பேருக்குமேல் கலந்து கொண்டனர். இரவு 9 மணிக்கு, வெளியூர் தோழர்களுக்கு விருந்து நடந்தது. 10 மணிக்குக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. காளூர் தோழர் தங்கவேல் அவர்கள் தலைமை தாங்கினர். தோழியர் ஜெகதாம்பாள், தோழர்கள் தட்சிணாமூர்த்தி, மாணிக்கவேல் இசைப் பாடல்கள் பாடினர்கள். போளூர் தி. மு. கழகத் தோழர்கள் இல, கோதண்டன், பி. கிருட்டினன், கோ. கிருட்டினசாமி, கே. சுப்ரமணியம், ஜெகநாதன், ஆகியோர், இயக்கக் கொள்கைகளையும், இலட்சியங்களையும்பற்றி பேசினர்கள். தோழர் கண்ணன் நன்றி கூற கூட்டம் இரவு 12 மணிக்கு முடிந்தது.

மதிப்புரை

திருக்குறள் ஆராய்ச்சி

[ஆசிரியர்: இறையனார் கிடைக்குமிடம்: பிழைக்கும் இலக்கியத் தார் தெரு, உறையூர் திருச்சிராப்பள்ளி; விலை: ரூ 1-8-0]

ஆசிரியர் இறையனார் அவர்களால் இயற்றப்பட்ட திருக்குறள் ஆராய்ச்சி நூல் வரப்பெற்றோம். திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூற்கள் பல பெருகி வரும் இக்காலில் இவ்வாராய்ச்சி நூல் வெளிவந்திருப்பது பெரிதும் பயன்தரத்தக்கதாகும். இதுகாறும்வெளிவந்துள்ள குறள் ஆராய்ச்சிகளையும், இறையனாரின் ஆராய்ச்சியினையும் ஒப்பு நோக்குமிடத்து, பல வழிகளில் இந்நூல் பயனுடையதொன்று எனத் துணிந்து கூறலாம். வள்ளுவர் சைவரா, வைணவரா, அவர் செய்த குறள் யாருக்குச்சொந்தம், அதற்கு ஆதாரங்கள் யாவை என்பன போன்ற பொருளற்ற ஆராய்ச்சிகளில் இறங்காமல், உலக இயல்பு, உயிர்களின் இயற்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு குறளை ஆராய்ந்துள்ளார் இவ்வாசிரியர். "குறள் உலகப் பொது மறை" என்ற உண்மையை நிலைநாட்டும் வண்ணம் அமைந்துள்ளது இந்நூல். அதுமட்டுமின்றி பரிமேலழகருடன் உரையால் குறளுக்கு ஏற்பட்டுள்ள மாசுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். அதற்குச்சான்றுகள் பல தருகிறார். வள்ளுவரின் கடவுட் கொள்கையினை ஏழுபட உணர்த்துகிறார்; வள்ளுவர் வாய்மொழி மூலம் பண்டைத் தமிழின் உயரிய பண்பாட்டினை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறார். ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் மனுநீதியையும் வள்ளுவர் குறளையும் ஒப்பிட்டுக் காட்டி, மனுநீதி விளைத்த தீமையினையும், குறள் நீதி காட்டும் வழியினை விளக்குகிறார். சுருக்கச் சொல்ல வேண்டுமானால் இஃதோர் நல்ல ஆராய்ச்சி நூல் என்றே சொல்ல வேண்டும். படித்துப் பாருங்கள். (த. சி. வே)

பொதுச்செயலாளருக்கு கொடைக்கானலில் வரவேற்பு!

கொடைக்கானல், பிப். 12—

தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மதுரை மாவட்டச் சுற்றுப்பயணத்திற்கு வந்தபோது, 8—2—50-ல் கொடைக்கானல் புகைவண்டி நிலயத்தில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டியில் பொதுச்செயலாளரைச் சந்தித்து மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான தொழிலாளர்களும், மாணவர்களும், புகைவண்டி நிலயத்தில் அண்ணா அவர்களைச் சந்தித்து, மாலை அணிவித்து மிக உற்சாகத்துடன் வரவேற்றனர்.

சினிமா தொழிலாளர்கள் உண்ணாவிரதம்!

சென்னை, பிப். 24—

பத்து ஆண்டு காலமாக சென்னை சாகர் டாக்கியில் வேலை பார்த்து வந்த பழைய தொழிலாளர்கள் 17 பேரையும் புதிதாக திறக்கப்பட்ட பெரிய மேட் அசோக் டாக்கியில் வேலை கொடுப்பதாக சொல்லி சர்க்காரையும் தொழிலாளர்களையும் ஏமாற்றி, தொழிலகத்திலவரும் எல்.எஸ். ஷட்டே மீது, சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்க பழைய தொழிலாளர் 17 பேரையும் அசோக் டாக்கியில் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், பெரம்பூர் லட்சுமி டாக்கிஸ். சன் டைரெக்டர், ஆகிய இரு டைரெக்டர்களிலும் சர்க்காரில் கொடுக்கப்பட்ட மத்தியஸ்தர் தீர்ப்பின்படி, சம்பளமும், பஞ்சப்படியும், கொடுக்க வேண்டும், சென்னை சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட மத்தியஸ்தர் தீர்ப்பை, சினிமா முதலாளிகள் புறக்கணித்தால், சர்க்கார் அவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுத்து மத்தியஸ்தர் தீர்ப்பின் முழுமையும் அமுல் நடத்தும்படி கோரியும் 26—1—50 7—2—50 ஆகிய இரு கூட்டங்களின் தீர்மானத்தின்படி, 27—2—50 திங்கட்கிழமை காலை பத்து மணி முதல் செகண்டு சென்னை கோட்டைக்கெதிரில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக, தோழர்கள் சி. கே. நடேசன், (ஷை சங்கத்தின் பொது காரியதரிசி. முன்னாள் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்.)

தோழர் சி.ஏகாம்பரம், (முன்னாள் புக்கிங் கிளார்க், சாகர் டாக்கீஸ், தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்.)

வி. எஸ். ஆதிகேசவலு (முன்னாள் ஆப்ரேட்டர், சாகர்.)

ஜி. ராதாகிருஷ்ணன், (எலக்ட்ரிஷன், சாகர்) ஆகியோர் அறிவித்துள்ளனர்.

பர்மா பொதுத் தேர்தல் ஒத்திவைப்பு

தாகின் நூ சர்க்காருக்கு ஆயுள் நீடிப்பு

ரங்கூன், பிப். 24—

இவ்வாண்டு மே மாதம் 4-ந்தேதி பர்மாவில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தல், 1951 மே மாதம் 4-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

பர்மிய அரசியல் திட்டத்தில் இன்னும் 18 மாதங்களில் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று, ஒரு ஷரத்துசேர்க்கப்பட்டிருக்கிறது. நாட்டில் அமைதியான நிலைமை ஏற்படாததால், 18 மாதம் என்பதை 28 மாதம் என்று திருத்தப்பட்டுவிட்டது.

தேர்தல் மேற்பார்வை கமிஷன் செய்துள்ள சிபார்சின் பேரிலேயே இந்த ஒத்திவைப்பு யோசனையைப் பர்மிய பார்லிமெண்ட் ஏற்றிருக்கிறது. 28 மாதம் என்றிருந்ததை இப்பொழுது 40 மாதங்கள் கழித்து என்று மீண்டும் திருத்தியிருக்கிறார்கள். ஆகவே தாகின் நூ சர்க்கார் இன்னும் ஒரு ஆண்டு நீடிக்கும்.

ஒத்திவைப்பு

பொள்ளாச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 26-2-50ல் நடக்கவிருந்த பொதுக் கூட்டம், சோஷலிஸ்டு கட்சியினரின் வேண்டுகோளுக்கிணங்க 5—3—50க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய நூல்கள்

❀

காலண்டர் 0—5—0

மு. கருணாநிதி

வாழமுடியாதவர்கள்	0-12-0
பெரியஇடத்துப் பெண்	0-8 0
சங்கிலிச்சாமி	0-8-0
பலிபீடம்நோக்கி	0-6-0
அறப்போர்	0-3-0
கயிற்றில்தொங்கிய கணபதி	0-3-0

K. A. மதியழகன் B. A.

அவதூறு வழக்கு	0-3-0

இரா. நெடுஞ்செழியன்

புதிய பாதை	0-8-0
கம்பரும் வம்பரும்	0-4-0
மக்கள் மறுமலர்ச்சி	0-3 0
மனப்போக்கு மாறவேண்டும்	0-2-0
சொல்வதெல்லாம் செய்தல் சமத்துவம்	0-2-0

இராதாமணாளன்

துளி தேன்	0-8-0
மதம் அவசியமா ?	0-3-0

தில்லை-வில்லாளன்

தங்கத்தாமரை	1-0-0
கழுதை ஊர்வலம்	0-8-0
சாவோலை	0-8-0

அண்ணாத்துரை

தேவலீலைகள்	0-8-0
அண்ணாவின் உவமைகள்	0-8-0
மூலபலம்முறிகிறது	0-8-0
அறநிலையங்கள்	0-6 0
மகாகவி பாரதியார்	0-6-0
அண்ணாவின் சொல்வன்மை	0 5-0
பொருள்	0 4 0
மறுமலர்ச்சி	0-4-0
நூல்நிலையங்கள்	0-3 0
அண்ணாவின் அறைகூவல்	0-3-0
அண்ணாவின் அடுக்குத்தொடர்	0-3 0
அண்ணாவின் அறிவுரைகள்	0-3-0
மேடைப்பேச்சு	0 1-6
என்னைக் கவர்ந்த புத்தகங்கள்	0-2-0
ஸ்தாபன ஐக்கியம்	0 2 0
சொல்வதெல்லாம் செய்தல் சுதந்திரம்	0-2-0
நாடும் ஏடும்	0-6-0
சிங்காரவேலர்	0-4-0
அறிஞர் அண்ணாத்துரை	1-4-0
பரிசுப்பதிப்பு	2-0-0

இதர புத்தகங்கள்

பரமசிவனுக்கு பகிரங்கக் கடிதம்	0-3-0
அவள் ஒரு எக்ஸ்ட்ரா ?	0-4-0
மனைவி எப்படி இருக்கவேண்டும்?	0-3-0
காதல்புரிவது எப்படி ?	0-6-0
சதிகார சாமியார்	0-8-0
கடவுளும் மனிதனும்	0-3-0
புரோகிதன் முளைத்தான்	0-3-0
என் கடன் களிப்பூட்டுதலே	0-3-0
திருடாதே (சிறுவர் கதை)	0-1-6

விற்பனைக் கழிவு 25% சிலவு இனம். தனிப் பிரதிக்கு தபால்தலை தேவை

முன்னேற்றப் பண்ணை,
2/122, பிராட்வே, சென்னை-1.

மத்திய கிழக்கில் சவான்களுக்கு கிராக்கி

லண்டன், பிப். 25—

மத்திய கிழக்கு நாடுகளில் சவான்களுக்கு ஏக கிராக்கியிருக்கிறதென்றும், முக்கியமாக கிழக்கு ஆப்ரிக்காவில் மெரியா தெரிஸா வெள்ளி நாணயங்கள் பெரிதும் விரும்பப்படுகின்றனவென்று தெரிகிறது.

அரபு நாடுகளில் சில தங்களுடைய எண்ணெய்க்குப் பதில் சவரனாகத்தான் பணம் செலுத்தவேண்டும் என்று வற்புறுத்துவதால், சவரன்கள் அகப்படுவதேயில்லை என்று கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1